

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் சட்டமன்றத் தொகுதி அருகம்பாளையத்தில் மாபெரும் கபாடி போட்டியை கரூர் மாவட்ட கழக செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.

திருவையாறு தொகுதி – பூதலூர் ஒன்றியம்

# இளங்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்!

## சட்டப் பேரவையில் உறுப்பினர் துரை.சந்திரசேகரன் கோரிக்கை!

சென்னை, ஏப். 7-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது திருவையாறு தொகுதி துரை.சந்திரசேகரன் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் மா. சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:-



**துரை. சந்திரசேகரன்** : திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், இளங்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** பூதலூர் ஒன்றியம், இளங்காடு கிராமத்தைப் பொறுத்தவரை, இங்கு ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்த துணை சுகாதார நிலையம் மாரனேரி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. பூதலூர் ஒன்றியத்தில் ஏற்கெனவே பாளையப்பட்டி, கோவிலடி மற்றும் மாரனேரி ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இளங்காடு துணை சுகாதார நிலையத்திற்கு வருகிற பொதுமக்களுக்கு இடைநிலை சுகாதார செவிலியர்மூலம் *eSanjeevani* முறையில் மாரனேரி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களோடு தொடர்பு கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இளங்காடு துணை சுகாதார நிலையத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் மாரனேரி ஆரம்ப சுகாதார நிலையம், 5 கிலோ மீட்டர் தொலைவில், திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருவதால், மக்கள்தொகையின் அடிப்படையில் இளங்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**துரை. சந்திரசேகரன்:** இளங்காடு கிராமத்தில் துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் இல்லை. எனவே, அந்த நிலையத்திற்கு புதிய கட்டடத்தை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா.

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** இளங்காடு கிராமத்திலிருக்கிற துணை சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரை அதனுடைய கட்டடம் ஏற்கெனவே, பாழடைந்திருக்கிறது. அந்தத் துணை சுகாதார நிலையம் தற்போது வேறு ஒரு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

**துரை. சந்திரசேகரன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோல, திருவையாறு தொகுதியில் கல்யாணபுரம், செம்மங்குடி, விளாங்குடி, வரகூர், கூடநாணல் மற்றும் செங்கிப்பட்டி போன்ற பகுதிகள் கட்டடம் இல்லாமல் இருக்கின்றன. அதற்கும் கட்டடம் அமைப்பதற்குரிய ஏற்பாட்டினை அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா? அதோடு, தஞ்சை மாவட்டத்திலே 300 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. அதில் 116ல் தான் இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள இடங்களுக்கும் நியமிக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** தஞ்சை மாவட்டத்திலிருக்கிற அத்துணை துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், எங்கெங்கே புதிய கட்டடங்கள் வேண்டுமோ அவைகளெல்லாம் கண்டறியப்பட்டு, தொடர்ச்சியாக முன்னுரிமை அடிப்படையில் தொடர்ந்து கட்டித் தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது, கல்யாணபுரம், செம்மங்குடி, விளாங்குடி, வரகூர், கூடநாணல் மற்றும் செங்கிப்பட்டி ஆகிய 6 துணை சுகாதார நிலையங்களுக்கும் மன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, மிக விரைவில் முன்னுரிமை அடிப்படையில் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



நாகை, கீழ்வேளூர், திருக்குவளை, வேதாரண்யம் நீதிமன்றங்களுக்கு தலைமைக் கழகத்தால் புதிதாக நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் அணிக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய பொறுப்பாளர் அறிமுகம் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் புதிய பொறுப்பாளர்களுக்கு சட்ட புத்தகம் வழங்கினார். உடன் நாகை நகர செயலாளர், நகரமன்ற தலைவர் இரா. மாரிமுத்து நாகூர் நகர செயலாளர் நகரமன்ற துணை தலைவர் எம். ஆர். செந்தில்குமார், தலைமை கழக வழக்கறிஞர் எம்.தினேஷ்குமார்,தகவல் தொழில் நூட்ப மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பாரிபாலன் வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர் சிங்காரவேலு, துணை தலைவர் மா. மீ. அன்பரசு,மாவட்ட துணை அமைப்பாளர்கள். பாஸ்கர், சபா ரத்தினம், மாவட்ட அரசு வழக்கறிஞர் ஆர். செல்வராஜ் ஜெய்சங்கர், எஸ். ஆர். அன்பழகன் மற்றும் பலர் உள்ளனர்.

ஊத்துக்குளி வெண்ணெய்க்கும் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்படும்! திராவிட மாடல் ஆட்சியில் தான்

# 64 பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கி சாதனை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்!

சென்னை,ஏப்.7-

சட்டப் பேரவையில் பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளியில் வெண்ணெய் மற்றும் நெய் ஆகிய பொருட்களுக்கு ஆராய்ச்சி மையத்துடன் கூடிய தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா? என்று உறுப்பினர் எஸ்.ஜெயக் குமார் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அளித்த பதில் வருமாறு:



பெருந்துறை தொகுதி ஊத்துக்குளியில் வெண்ணெய், நெய்க்கான ஆராய்ச்சி மையம் மற்றும் ஒரு தொழிற்பேட்டை அமைக்க முடியுமா என்று உறுப்பினர் கோரியிருக்கிறார்கள். அங்கே இடம் இருப்பின் நிச்சயமாக திராவிட நாயகன் அவர்களின் அரசாங்கம் அதற்கான முயற்சிகளை எடுக்கும்.

திராவிட நாயகனின் இந்த திராவிட மாடல் ஆட்சியில்தான் 64 பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டு மிகப்பெரிய சாதனையை படைத்திருக்கிறோம். நிச்சயமாக ஊத்துக்குளி வெண்ணெய்க்கும் அதற்கு தேவையான அந்த சாத்தியக்கூறுகள் இருப்பின் நிச்சயமாக நமது MSME Minister அவர்கள் அதை செய்து தருவார். அங்கே 30 டன் நெய் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். தொழிற்பேட்டை அமைப்பதற்கு feasibility இருந்தால் நிச்சயமாக அமைப்பதற்கான வேலையை இந்த அரசாங்கம் செய்யும். அங்கே இடத்தையும் உறுப்பினர் அவர்கள் தயார் செய்து தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து உறுப்பினர் அவர்களுக்கு தங்களது வாயிலாக பதிலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதத்திற்கு அமைச்சர் டி.ஆர். பி.ராஜா பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா க.அ. இராசப்பா
### ஏப்ரல் 7 (1993)



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணியில் குமரி மாவட்டத் தலைவராகவும், பின்னர் மாவட்ட கழகத் துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக பாளையங்கோட்டை சிறையில் ஒரு வருடம் இருந்தவர்.

1986ல் நடைபெற்ற சட்ட எரிப்பு போராட்டத்தின்போது நெஞ்சு வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் "செந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின் இந்த தேகம் இருந்தென்ன லாபம்" என சொல்லி மருத்துவமனையிலிருந்து சிறைபுகுந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பெரம்பலூர் மாவட்ட கழக துணைச் செயலாளர்

# தழுதாழை பாஸ்கர் மனைவி பா.விஜயா மறைவு!

## அமைச்சர் கே.என்.நேரு - வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

பெரம்பலூர், ஏப். 6-

பெரம்பலூர் மாவட்ட கழக துணைச் செயலாளரும் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினருமான தழுதாழை பாஸ்கர் துணைவியார் திருமதி பா. விஜயா இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், தழுதாழை கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் அஞ்சலி செலுத்தி, மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கருக்கு ஆறுதல் கூறினார்கள்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு. நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் நூருல்ஹிதா இஸ்மாயில், சன். சம்பத், மாவட்ட பொருளாளர் செ. ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம். ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம.பா. செபாஸ்டின்
### ஏப்ரல் 7 (2010)



1955ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து, கழகத்தில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டம், 78வது வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து முப்பது ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

டெல்லியில் இலங்கை முன்னாள் அதிபர் ஜெயவர்த்தனேவிற்கு முரசொலி மாறன் அவர்களுடன் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இவர் உள்ளிட்ட ஐவர்மீது அ.தி.மு.க. அரசினால் போடப்பட்ட பொய் வழக்கில், நீதிமன்றத்தால் கலைஞர் அவர்களுடன் விடுதலை செய்யப்பட்டவர்.

1955ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தபோது, அவரிடம் தேதியுடன் பெற்ற கையெழுத்தை ஐம்பதாண்டுகள் பாதுகாத்து வைத்து, 2005ஆம் ஆண்டு, அவரது கையெழுத்தை காட்டியபோது, கலைஞர் அவர்கள் "உன்னைப் போல நீ இருக்காதே!'' என்று எழுதி கையொப்பமிட்டு வாழ்த்தினார்.

இந்தி ஆணை நகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.